செய்தி வெளியீடு எண்: 949 நாள் : 26.10.2010

**உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**பத்திரிக்கைச் செய்தி**

**முறையற்ற வணிகம் மற்றும் போலி விளம்பரங்களிலிருந்து நுகர்வோர் பாதுகாப்பு – நேரலை நிகழ்ச்சி**

தமிழ் நாடு அரசு, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மாநில அளவில் நுகர்வோர்க்கு விழிப்புணர்வு வழங்கும் திட்டத்தின் ஒரு செயல்பாடாக நுகர்வோர்கள் அன்றாட வாழ்வில் எதிர் கொள்ளக்கூடிய பிரச்சனைகள் தொடர்பாக பொதிகை தொலைக்காட்சியில் நேரலை நிகழ்ச்சி நடத்தி தொலைபேசி வாயிலாக நுகர்வோர் கோரும் சந்தேகங்களுக்கு விளக்கம் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மாதம்தோறும் மேற்கொள்ளப்படும் இச்சீரிய நடவடிக்கையில் 28.10.2010 வியாழக்கிழமையன்று முற்பகல் 12-05 மணி முதல் பிற்பகல் 01-00 மணி வரை நேர்மையற்ற வணிக முறைகள் மற்றும் தவறான விளம்பரங்களை தவிர்க்கவும் அவற்றால் பாதிக்கப்பட்டிருப்பின் நிவாரணம் பெறவும் நுகர்வோர்கள் மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகள் தொடர்பாகவும் நுகர்வோர்களுக்கு உரிய விளக்கங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது,. அவ்வமயம் நுகர்வோர்கள் மேற்கண்ட பொருள் தொடர்பான தங்களது கேள்விகளை கீழ்க்காணும் தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம்.

| | |
|---|---|
| உள்ளூர் நுகர்வோர்கள் | 17077, 64628270, 9444901011, 9444901021 |
| வெளியூர் நேயர்கள் | 044 – 17073, 64628270, 9444901011, 9444901021 ISD 0091 44253 97010 |

குடிமக்களின் கேள்விகளுக்கு தமிழகத்தில் இயங்கும் முன்னோடி நுகர்வோர் ஆர்வலர்கள் உரிய பதில் வழங்குவர். மேலும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்குவார்கள். கலப்படம், கள்ளச்சந்தை வியாபாரம், போலியான, காலாவதியான மற்றும் தரமற்ற உணவு பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் இதர வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை, உத்தரவாதத்தின்படி செயல்படாமை உள்ளிட்ட அநேக முறையற்ற வணிக முறைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வண்ணமும், நுகர்வோரை ஏமாற்றும் நோக்குடன் உண்மைக்கு புறம்பாக வெளியிடப்படும் விளம்பரங்களை கண்டு ஏமாறாமல் நுகர்வோர் பாதுகாப்பு பெறும் வண்ணமும் தமிழ் மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம் வாயிலாக ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழ்வில் தொலைபேசி வாயிலாக கலந்து கொண்டு விழிப்புணர்வு பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**